நீர்கொழும்பு பொலிஸிலிருந்து 50 துப்பாக்கிகள் அமைச்சர் மகன் பாதுகாப்புக்கு எடுக்கப்பட்டது!

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 சித்திரை 28 இதழ் 85
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 11 — 05 — 1993

(கொழும்பு)

நீர்கொழும்பு பொலிஸின் ஆயுதக் களஞ்சியத்திலிருந்து 50 துப்பாக்கிகள், போக்குவரத்து அமைச்சர் விஜேபால மெண்டிஸின் மகனுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாகப் பொலிஸ் அதிகாரிகளே முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த அதிகாரிகள் இவ்விடயம் தொடர்பாகச் சுதந்திரமான விசாரணை ஒன்ற

(4-ம் பக்கம் பார்க்க)

லலித் — பிரேமா கொலையாளிகள் இனம்காணப்பட்டனர்

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் லலித் அதுலத் முதலி, ஜனாதிபதி ஆர். பிரேமதாசா ஆகிய இருவரையும் கொலைசெய்தவர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

லலித் அதுலத் முதலியின் கொலைக்கு கதிரையா ரகுநாதன் என்பவரும், பிரேமதாஸாவின் கொலைக்கு குலவீரசிங்கம் வீரகுமார் என்பவரும் பொறுப்பாக இருந்ததாகவும் இவர்கள் இருவரும்

(4ம் பக்கம் பார்க்க)

லலித் கொலை: புலிகள் மேல் பழி சுமத்தி அரசு தப்பிக்கப்பார்க்கின்றது

ஐ. ஐ. தே. முன்னணி பேச்சாளர் டாக்டர் விக்கிரமவீரசூரிய குற்றச்சாட்டு!!

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் அத்துலத் முதலியின் கொலையை விடுதலைப் புலிகளின் மேல் சுமத்தி அரசு அதிலிருந்து தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறது, எனினும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி இந்தக் கொலை தொடர்பாக அரசின் மீதே மீண்டும் குற்றத்தை சுமத்துகிறது:

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் பேச்சாளர் டாக்டர் விக்கிரம சூரிய இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படி கட்சியின் தலைவர் திரு. காமினி திஸாநாயக்கா மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பு வாசஸ்தலத்தில் நடைபெற்ற பத்திரிகை

(4ம் பக்கம் பார்க்க)

மணலாறில் புலிகள் ராணுவம் மோதல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மணலாறுப் பகுதியில் இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்று திடீரென பெரும் மோதல் ஏற்பட்டதாக செய்திகள்

(4-ம் பக்கம் பார்க்க)

ரஷ்ய அதிபரை கொலை செய்ய முயற்சி

(மாஸ்கோ)

ரஷ்ய அதிபர் பொறிஸ் யெல்சினை கொலை செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக அதிபரின் பாதுகாப்புப் பணிக்குத்தலைவர் அறிவித்துள்ளார்.

அதிபர் யெல்சினின் அரசியல் போக்கை பிடிக்காத சில அரசியல்வாதிகள் கெரில்லாக் குழுக்களின் உதவியுடன் ரஷ்ய அதிபரை கொலைசெய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது தற்போது தெரியவந்துள்ளது.

கடந்த வருடம் மட்டும் அதிபர் யெல்சினின் உயிருக்கு

(4-ம் பக்கம் பார்க்க)

ராணுவத்திலும் பொலிசிலும் பாரிய மாற்றங்கள் ஏற்படும்

(கொழும்பு)

இராணுவத்திலும் பொலிஸிலும் பாரிய மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இப்பாரிய மாற்றங்கள் எடுத்த ஓரிரு வாரங்களில் நடைபெறவுள்ளது. பல அதிகாரிகள் பதவி உயர்வு பெறவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

கிளாலி - பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி-பூநகரி படகுச்சேவை இன்று 11-ம் திகதி செவ்வாய்க்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை அறிவித்துள்ளது.

இராணுவத் தளபதி ஓய்வுபெறுகிறார்

(கொழும்பு)

இராணுவ தளபதி ஜெனரல் சிகில் வைத்திரத்ன இம்மாத முடிவில் ஓய்வுபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவருக்கு சேவைக்காலம் நீடிப்பு வழங்கப்படுமா அல்லது அவர் ஓய்விலே செல்லுவாரா என்பது குறித்து

(4-ம் பக்கம் பார்க்க)

இனப்பிரச்னையை சுமுகமாக தீர்க்கவேண்டியது அவசியம் — பிரதமர் ரணில் உரை

(கொழும்பு)

"இன்றைய சூழ்நிலையில் நாட்டில் ஏற்பட்டுள்ள இனப் பிரச்சினையை சுமுகமாக தீர்த்து வைக்கவேண்டிய நிலை தற்போது ஏற்பட்டுள்ளது".

இவ்வாறு பிரதம மந்திரி திரு. ரணில் விக்கிரமசிங்கா நேற்று நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

(4-ம் பக்கம் பார்க்க)

திருநெல்வேலியில் புதிய வைத்தியசாலை நிறுவ சுகாதார அமைச்சு இணக்கம்

(யாழ்ப்பாணம்)

புதிய வைத்தியசாலை ஒன்றை திருநெல்வேலியில் நிறுவுவதற்கு சுகாதார அமைச்சு கொள்கையளவில் இணக்கம் தெரிவித்துள்ளது.

1,200 படுக்கை வசதிகளைக் கொண்ட புதிய வைத்தியசாலையை யாழ்ப்பாண மக்களுக்கு மருத்துவ பிரிவளாகத்துக்கு அருகில் நிறுவுவதற்குச் சுகாதார அமைச்சு இணக்கம் தெரிவித்திருப்பதாக, கொழும்பு சென்று திரும்பிய யாழ். போதனா வைத்தியசாலை அதிகாரிகள் குழுவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடபகுதியில் நிலைமை சீரடைந்ததும், யாழ். போதனா

(4-ம் பக்கம் பார்க்க)

வைத்திய சாதனங்கள் பிரிட்டன் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் உள்ள அரசினர் வைத்திய சாலைகளுக்கு பல கோடி ரூபா பெறுமதியான வைத்திய சாதனங்களை பிரிட்டிஷ் அரசு அன்பளிப்புச் செய்துள்ளது.

இந்த வைத்தியசாலைகளுக்கு பிரிட்டிஷ் அரசு அன்பளிப்புச் செய்த வைத்திய சாதனங்கள் அனைத்துந்தற்போது கொழும்

(4-ம் பக்கம் பார்க்க)

பணம் கொடுக்காததால் சிப்பாய் சுட்டு 2 இராணுவம் பலி

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் இராணுவத்தினரின் பதுங்கு குழியில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர், தம்முடன் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த இரண்டு இராணுவச் சிப்பாய்களைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(க-கி)

செய்துள்ளார்.

குறிப்பிட்ட இரண்டு இராணுவச் சிப்பாய்களும் தமக்குப் போதிய பணம் தரவில்லை என்று ஆத்திரம் அடைந்ததாலேயே இவர் இராணுவச் சிப்பாய்களைச் சுட்டுக் கொன்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வரிவிளம்பரம்

தேவை

அரசசேவையினின்றும் ஓய்வு பெறும் தனி ஒருவருக்கு யாழ்ப்பாணத்திலே நெடுங்காலமும் தங்குவதற்கேற்ற இடம் முடியுமாயின் மதிய உணவுடன் தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல:-90, மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம். (இ-90)

எலுமிச்சை விலை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே தற்போது எலுமிச்சம் பழத்தின் விலை பன்மடங்கு அதிகரித்துக் காணப்படுகிறது.

ஒரு எலுமிச்சம்பழம் இருபது ரூபாய் வரை தற்போது யாழ்நகரில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. (159)

பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகத்தினர் கிளிநொச்சிக் கோட்டத்தில் நடத்திய மாட்டுவண்டி சவாரிப்போட்டி உட்பட பலவேறு போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பு வைபவம் அண்மையில் கிளிநொச்சிக் கச்சேரி விளையாட்டுத்திடலில் இடம்பெற்றது. (83)

விருது வழங்கி கௌரவிப்பு

(கொழும்புத்துறை)

இணுவில் மேற்கு அருள்மிகு ஸ்ரீ செகராசசேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு மகாபாரதம் தொடர் விரிவுரை ஆற்றிய திரு. குமாரசாமி சண்முகநாதனுக்கு மேற்படி ஆலய பரிபாலன சபையினர் 'மெஞ்ஞானசாகரம்' என்ற விருதை வழங்கி கௌரவித்துள்ளனர். (154)

இராசி பலன்

11-05-1993

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு சித்திரை 28)

பஞ்சமி காலை 5-59 வரை; பூராடம் காலை 6-35 வரை; இராகுகாலம் மாலை 2-54 முதல் 4-24 வரை; சுபநேரம் காலை 10-24 முதல் 11-54 வரை மரணயோகம்.

மேடம்: மாற்றுவன்மை, சாதுரியம். பொதுத்துறை பாராட்டு.

இடபம்: வீண் பொருள் இழப்பு, பிறர் வஞ்சனை, அலைச்சல்.

மிதுனம்: உடன் பிறந்தார் தொல்லை, தேக பாதிப்பு, வெறுப்பு.

கடகம்: குடும்பலாபம், சுபகாரிய முயற்சி, ஒத்துழைப்பு.

சிங்கம்: அதிக வருமானம், திடீர் லாபம், நிரப்பந்தம்.

கன்னி: குடியிருப்புக் கஷ்டம், புதிய விவகாரம், யோசனை.

துலாம்: சமயோசித குறைவு, பணக்கஷ்டம், மனவேதனை.

விருச்சிகம்: நண்பரி ஆதரவு, தந்தையரி கவலை, மனவி பெருமை.

தனுசு: தொழில் பயம், விரோதிகள் நிரப்பந்தம், கடன்சுமை.

மகரம்: மேலதிகாரி கவனமை, இனிய சம்பாஷணை, காரியசித்தி.

கும்பம்: வீண் தகராறு, கணித்துறை ஏமாற்றம், கௌரவ குறைவு.

மீனம்: முயற்சியில் பலிதம், உயர்ந்த அந்தஸ்து, மகிழ்ச்சி.

— ஜோல்யர்

கரமந்தாட்ட போட்டி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி சனசமூகநிலையத்தினர் கரமந்தாட்டத்தை ஊக்குவிக்குமுகமாக மாவட்டம் தழுவிய ரீதியில் கரமந்தாட்டப்போட்டி ஒன்றினை நடாத்தவுள்ளனர்.

ஆண்டுவிழாவினை முன்னிட்டு இப்போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. -83

அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பரியோவான் கல்லூரி இன்ரராக்ட் கழகத்தினர் அரியானை அன்பகம் சிறுவர் இல்ல சிறுவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்கள்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்நிகழ்வின் போது சிறுவர்களுக்கான விளையாட்டு போட்டியும் நடைபெற்றது. (158)

விளையாட்டுப் போட்டி

(தாளையடி)

வடமராட்சிகிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டுப்போட்டிகள் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவு திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் க ஈஸ்வரபாதம் தலைமையில் செம்பியன் பற்று புனித பிலிப் நேரியார் விளையாட்டுக்கழக மைதானத்தில் அண்மையில் நடைபெற்றன.

இப்போட்டியில் தாளையடி சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் 92 புள்ளிகளைப்பெற்று முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டது. (163)

பண்ணிசைப் போட்டி

(கொழும்புத்துறை)

இணுவில் ஸ்ரீபரராசசேகரப் பிள்ளையார் ஆலயத்திருநெறிய தமிழ்மன்றக்கழகம் இணுவில்சைவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் பண்ணிசைப் போட்டிகளை எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடாத்த ஏற்பாடுகளை செய்துள்ளது.

இக்கழகம் வருடம் தோறும் ஆலய உற்சவத்தை முன்னிட்டுப்பண்ணிசைப் போட்டிகளை நடாத்தி முதலிடம் பெறுபவர்களுக்கு தங்கப்பதக்கங்களைப் பரிசாக வழங்கிப்போட்டியாளர்களை ஊக்குவித்து வருவது பாராட்டுதற்குரிய விடயம் (154)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை

வாழ்த்துகின்றது



உயர்திரு

இராமுப்பிள்ளை சுந்தரலிங்கம்

மணிவிழாக் கண்ட வடமாநிலக் கல்வியதிபதி உயர்திரு இரா. சுந்தரலிங்கம் அவர்களை உயர்வு பெற்று நீடூழிவாழ்கவென வாழ்த்துகிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள், பாடசாலை அபிவிருத்திச்சபை, பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை. (எ 1169)

31-ம் நாள்

நினைவஞ்சலி



ஆமரர்

கந்தையா புவனேந்திரன்

(உபதலைவர், இலங்கை செஞ்சிலுவைச்சங்கம், யாழ். கிளை)

(ஆசிரியர் யாழ்/சண்மார்க்க மகாவித்தியாலயம்)

தோற்றம்: 14-12-1949 மறைவு: 10-04-1993

தன்னலமற்ற சேவையாளன், சமூகத் தொண்டன் அமரர் புவனேந்திரன் அவர்களே, உங்களை இழந்து இன்று தமிழ் உலகமே தவிக்கின்றது. உங்களைப் பிரிந்து 31நாள் சென்றாலும் உங்கள் நினைவுகளை எமது நெஞ்சங்களில் சோகங்களாகவே சுமந்து நிற்கின்றோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

(கி-94) பளைப் பிரிவு

கலாலயா

மகளிருக்கான

டிப்ளோமா

"மனைப்பொருளியலும் கைத்திறனும்"

பயிற்சிகள்

-0-0-0-0-0-0-0-0-0-0-0-0-0-0-0-

★ கேக் ஐசிங்

★ கைவேலை

★ உணவுகள் தயாரித்தல்

★ பூ வேலை

◇ தையல் பயிற்சி

(குழந்தைகள், சிறுவர்கள், மகளிருக்கான சகலவிதமான உடைகள் தைத்தல், பூவேலைப்பாடுகள் செய்தல்)

மேற்படி பயிற்சிகள் பயிலும் மாணவிகளுக்கு—

★ இலவச கூந்தல் அலங்காரம், கோலம் வகுப்புகளும் நடைபெறும்.

பயிற்சிக்காலம் 6 மாதங்கள்

★ பயிற்சியின் முடிவில் அங்கீகரிக்கப்பட்ட தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும்.

★ கிழமை நாள் பயிற்சிகள் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய நாட்களில் காலை 9-00 மணி முதல் பிற்பகல் 1-00 மணி வரை நடைபெறும்.

★ சனி, ஞாயிறு பயிற்சிகள் காலை 9-00 மணி முதல் பிற்பகல் 3-00மணி வரை நடைபெறும்.

புதிய சனி, ஞாயிறு பிரிவுகள்:

ஆரம்பம்: 16-05-1993

புதிய கிழமை நாள் பிரிவுகள்:

ஆரம்பம்: 17-05-1993

★ கலாலயா ★

(பல் பயிற்சியகம்)

விக்டோரியா வீதி,

(ஆஸ்பத்திரியின் பின்புறம்)

யாழ் நகர்.

(ஏ-3118)

உலகை அச்சுறுத்தும் போதைவஸ்து பாவனையில்

இளைஞர்களே பெருமளவில் ஈடுபடுகின்றனர்

தமிழீழத்தில் போதைவஸ்து பாவித்தல், விற்பனை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் இன்று வாழும் இளைஞர் சமுதாயம் தீயவழியில் செல்லாது ஒரு ஒழுக்கமான பண்பான சமுதாயமாக உருவெடுப்பதற்கு வழி சமைக்கப்பட்டுள்ளது.

இருந்தபோதிலும் எமது மண்ணைவிட்டு வெளியேறி அந்நியநாடுகளில் அடைக்கலம் புகுந்தோரில் பலர் போதைவஸ்து பாவனை, விற்பனையில் ஈடுபட்டுள்ளனர். பலர் அந்நியநாட்டு சுரங்கச் சிறைகளில் ஆயுட்கால விருந்தாளியாக உள்ளனர். அவர்கள் ஒருகாலத்தில் எமது நாட்டுக்குள் மீண்டும் காலடி எடுத்து வைக்கும்போது இந்தப் போதைவஸ்து பாவனை பூதாகரமான பிரச்னையாக எழலாம்.

இலங்கையைப் பொறுத்த மட்டில் 50,000 பேர்கள் போதைவஸ்து பாவனையில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் ஒரு தரம் அல்லது இரண்டு தரம் அல்லது பலதடவை போதைவஸ்து பாவித்தவர்களாக இருக்கிறார்கள்.

பதினைந்து தொடக்கம் 20 வயதுள்ள இளைஞர்களே கூடுதலாக இந்த வழியில் இறங்கியுள்ளார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. வீடுகளில் பெற்றோரின் அரவணைப்பில் இருந்து விடுபட்ட இளைஞர்களுக்கு இந்தப்போதைவஸ்து நிவாரணம் கொடுப்பது போன்று அவர்களுக்கு தென்படுகிறது.

போதைவஸ்து பாவிப்பவர்கள் இதற்கென சராசரியாக ஒரு மாதத்துக்கு 5000தொடக்கம் 10.000 ரூபாவை செலவு செய்கிறார்கள்.

மணிசேகரன்

இன்று ஐரோப்பிய நாடுகளான ஜேர்மனி, கொலண்ட், பெல்ஜியம்' பிரிட்டன், பிரான்ஸ், சுவிஸ், ஆஸ்திரியா போன்ற நாடுகளில் போதைவஸ்து அதிகமாகப் பாவிக்கும் நாடுகளாகும். தற்போது ஆபிரிக்க தேசத்திலும் போதைவஸ்து பாவனை மெல்லமெல்ல முகம் காட்டத் தொடங்கியுள்ளது.

ஒரு நாட்டில் இருந்து இன்னொரு நாட்டுக்கு கூடுதலாக விமானமூலமே இவை கடத்தப்படுகின்றது.

சூட்கேஸ், கிறைண்டர்கள், மோட்டார் உதிரிப்பாகங்கள், காற்றடி போன்ற பொருட்களுக்குள் மறைத்து வைத்து போதைவஸ்தை கடத்துகிறார்கள். கடல்வழியாக இந்தியா ஊடாக இலங்கையினுள் கற்பிட்டி, பேருவளை கடற்கரைக்கு வந்து சேருகின்றன.

1981ம் ஆண்டு போதைவஸ்து கடத்தினார்கள் என்று 8 பேர் கைதுசெய்யப்பட்டனர். இந்தத் தொகை 1986ல் 4,639 ஆகவும், 1992ல் 9,705 பேராகவும் உயர்ந்துள்ளது.

போதைவஸ்து பாவனை, நாளுக்கு நாள் இலங்கையில் அதிகரித்து வரும் இவ் வேளையில் பிறநாடுகளில் இந்தக் கடத்தல்காரர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்படுகின்றது

இதுபற்றி போதைவஸ்து தடுப்புப் பணியகத்தில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரி கூறுகையில், ஆடம்பரமான கார்களில் முக்கிய புள்ளிகள் இந்தத் தொழிலில் சம்பந்தப்பட்டிப்பதால் இவைகளினை காண முடியாதிருக்கின்றது. இருந்தபோதிலும் போதைவஸ்து பாவனையின் தீங்குகள் பற்றிபாடசாலைகளில் போதிக்கப்பட வேண்டும். இதைச்சில பாடசாலைகள் நடைமுறைப்படுத்தி வருகின்றன என்றார்.

பட்டதாரி பயிலுனர்கள் நியமனங்கள் தாமதம்

(திருநெல்வேலி)

பட்டதாரிப் பயிலுனர்களுக்கான நேர்முகப்பரீட்சைகள் முடிவடைந்தபோதும் இவர்களது விபரப்பட்டியல்கள் கொழும்பிற்கு அனுப்பப்பட்டு அனுமதி பெறப்பட்டபின்பே நியமனம் வழங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சையை இங்கு நடாத்த அனுமதிவழங்கப்பட்டிருந்தது இவர்களது விபரப்பட்டியல்கள் விரைவில் எடுத்துச் செல்லப்பட உள்ளதாகவும் அதன் பின்னரே நியமனங்கள் வழங்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. -257

தேர்த்திருவிழா

(அரியாலை)

பருத்தித்துறை ஸ்ரீசண்டிகா பரமேஸ்வரி அம்மன் தேர்த்திருவிழா நீண்டகாலஇடைவெளிக்குப்பின் மீண்டும் எதிர்வரும் 14ந் திகதி வெள்ளிக்கிழமை பருத்தித்துறை கடற்கரை வீதி கொட்டடி மக்களால் கொண்டாடப்படவுள்ளது -59

கடற்புலிகளின் உற்பத்தி எழுச்சிவார போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

உற்பத்தி எழுச்சி வாரத்தை முன்னிட்டு கடற்புலிகளின் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் வடமராட்சி வாரம் நடாத்திய போட்டிகளுக்கான இறுதிச் சுற்றுப் போட்டிகள் வடமராட்சி வடக்கில் நடாத்தப்பட்டது.

இப்போட்டியில் வெற்றியீட்டியவர்களின் விபரம்:

கிடுகு பின்னல்: 1.ச. சுசிலா தேவி, குடத்தனை மேற்கு. 2. வா. பற்றியாநாயகி, அல்வாய் மேற்கு. 3. க. ரஞ்சனி தேவி, அராலி மேற்கு.

தும்புத்தடி தயாரித்தல்: 1. கா. குணரத்தினம், அராலி மேற்கு. 2. ந. ஐயாத்துரை, தெனி ஒழுங்கை, வல்வெட்டித்துறை. 3 க. மகேந்திரராசா, தொண்டமானாறு.

நீச்சல்: 1 நா. விஸ்வரத்தினம், ஆதிகோவிலடி, வல்வட்டித்துறை. 2 இ. ரதீஸ்வரன், நாகர்கோவில் மேற்கு 3. க இராசலிங்கம், நாகர்கோவில் மேற்கு.

விளக்குமாறு தயாரித்தல்: 1. கா. குணரத்தினம், அராலி மேற்கு, 2. க. மகேந்திரராசா, தொண்டமானாறு. 3. கி. செல்லத்துரை, வடிஸ்லோன் பீலிக்ஸ்வெளி, அம்பன், மருதங்கேணி.

குட்டான் தயாரித்தல்: 1. வே. விமலேஸ்வரி, அராலி மேற்கு. 2. க. ரஞ்சினிதேவி, அராலி மேற்கு 3. கு. விமலாதேவி, அராலி மேற்கு.

கயிறு திரித்தல்: 1. கி. செல்லத்துரை, அம்பன். 2. ந. ரஞ்சினி, அராலி மேற்கு 3. ந. இராசினி, அராலி மேற்கு.

கம்பான் குத்துதல்: 1. க. இராசலிங்கம், நாகர்கோவில் மேற்கு. 2. மா. யோசேப், 3. இ. சந்திரபாலு, பொலிகண்டி, நாகர்கோவில் மேற்கு.

பனைமரம் ஏறுதல்: 1 அ. விஞ்சலதாஸ், பொலிகண்டி. 2. பொ. அழகன், பொலிகண்டி. 3. யோசேப் ஞானஜெயராஜ், நாகர்கோவில் கிழக்கு.

புதிய உணவு தயாரித்தல்: 1. பா. விமலாம்பிகை, பொலிகண்டி கிழக்கு. 2. வி. மகாலக்ஷுமி, பொலிகண்டி குழக்கு, 3. ர. ரஞ்சனா பொலிகண்டி கிழக்கு.

வலை பின்னல்: 1. சி. யோகேந்திரன், அல்வாய் மேற்கு 2. யாகப்பு பற்றிமாநாயகி, பொலிகண்டி கிழக்கு.

பாய்மரம் ஓட்டுதல்: 1. கி. சுகுணதாஸ், அல்வாய் வடக்கு. 2. ஞானாறி, பொலிகண்டி கிழக்கு. 3. யா. அருள்நேசன், அல்வாய் மேற்கு.

நிலம் கொத்துதல்: 1. ம. இராமச்சந்திரன், பொலிகண்டி 2. பொ. தங்கவேல், பொலிகண்டி கிழக்கு. 3. ந. இராசலிங்கம், பொலிகண்டி.

கட்டுமரம் வலித்தல் (துடுப்பு): 1. நா. கிவலிங்கம், நாகர்கோவில் கிழக்கு. 3. மு. சிவசுந்தரம், நாகர்கோவில் கிழக்கு. 3. து. சந்தசாமி, நாகர்கோவில் மேற்கு.

கட்டுமரம் வலித்தல் (சவுக்): 1. கி. சுகுணதாஸ், இன்பருட்டி. 2. தி. கிவாகரன், இன்பருட்டி. 3. பா. யோசேப், பொலிகண்டி.

துலாமிதித்தல்: 1. கி. சுதாகரன், அல்வாய்மேற்கு. 2. க. மயில்வாகனம், பொலிகண்டி. 3. சி புஸ்பராசா, அல்வாய் வடமேற்கு.

வண்டிச்சவாரி; 1 பா. மகேந்திரராசா, செம்பியன் பற்று. 2. க. தவமேனன், நாகர்கோவில் தெற்கு, 3. சு. கிவஸ்கரலிங்கம், குடத்தனை.

மாடுகளை திருடியவர்கள் காவல்துறையிடம் சிக்கினர்

(எழுதுமட்டுவாள்)

இரு வண்டில் மாட்டினை திருடிய இரு நபர்களை சரவணக்சேனி காவல்துறையினர் கைதுசெய்துள்ளனர்.

நுணாவில் மடத்தடியை சேர்ந்த பரராசசிங்கம் என்பவர் தனது இருமாடுகளையும் வீதியில் கட்டிவிட்டு வெளியில் சென்றபோது இனம் தெரியாத இரு நபர்கள் மாட்டைஅவிழ்த்துக்கொண்டு மறைந்துவிட்டனர்.

பின்பு காவல்துறையினர் இவர்களை கைதுசெய்துள்ளனர். இரு மாட்டினது பெறுமதி 65,000 ரூபா எனத்தெரிவிக்கப்படுகிறது (170-கி)

மீட்புநிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

நாளை 12-ம் திகதி புதன்கிழமை நல்லூர் மங்கையற்கரசி மகா வித்தியாலயத்தில் மாலை 3 மணி தொடக்கம் 4 மணி வரையும் மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுவரை காலமும் மீட்புநிதிக்கடனைச் செலுத்தத் தவறியோர் இக் குறித்த நாளில் தமது மீட்பு நிதிக்கடனைச் செலுத்த முடியும். சி

க. பொ. த. பரீட்சை கணித பாடத்தில் சித்தியடைந்தோர் குறைவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் 1990/91-ம் ஆண்டு க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் 65 வீதமான மாணவர்களே கணித பாடத்தில் சித்தியடைந்துள்ளனர்.

ஆங்கிலத்தில் 24·54 சத வீத மாணவர்களும், சமூகக் கல்வியில் 46 வீத மாணவர்களும், விஞ்ஞானத்தில் 38·05 வீத மாணவர்களும் தமிழ் மொழியும் இலக்கியமும் 68·6 வீத மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (சு-கி)

காந்தி நிலைய நிர்வாகி காலமானார்

(கிளிநொச்சி)

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் தலைவராகவும் உருத்திரபுரம் காந்தி நிலைய நிர்வாகியுமான திரு. கி. க. வேலாயுதபிள்ளை கொழும்பில் காலமானார் என தெரிவிக்கப்பட்டது.

இவர் ஆசிரியத்தினூடாக தலைமையிலான சர்வோதய இயக்கத்தின் கிளிநொச்சி கிளை பிரதிநிதியுமாவார். -83

காலமானார்

(புதுடில்லி)

இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை ஆசிரியர் முக்கேஸ்கர் நேற்று முன்தினம் புதுடில்லியில் காலமானார்.

இந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகை ஆசிரியராக சுமார் 10 வருடகாலம் கடமையாற்றிய இவர் சிறிது காலமாக நோய் வாய்ப்பட்டிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-கி)

பதவி வெற்றிடங்கள் கோரப்படுகிறது

(திருநெல்வேலி)

வடக்கு-கிழக்கு மாகாண சபையினால் பாடசாலைகளில் உள்ள அலுவலக தொழிலாளர், காவலாளிகள், நூலக உதவியாளர், ஆய்வுகூட உதவியாளர் ஆகிய பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

இவற்றுக்காக ஏராளமானோர்கள் விண்ணப்பித்துள்ளார்கள். தற்போது இப்பதவிகளில் தற்காலிகமாக கடமையாற்றுபவர்கள் தமது விண்ணப்படிவங்களை பூர்த்தி செய்து கோட்டக்கல்வி அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறும் கல்வித்திணைக்களம் வேண்டியுள்ளது.

இவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. -157

பரீட்சையில் சித்தி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் எம். ஏ. பரீட்சையில் கே. கேதீஸ்வரன் டி. வின்செண்ட் பற்றிக் ஆகிய இருவரும் சித்தியடைந்துள்ளனர். -சு

வீபூதி தயாரிப்பு

(கொழும்புத்துறை)

நுணாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ வைரவர் முருகன் ஆலய இந்து இளைஞர்மன்றம் வீபூதி தயாரித்து அடியார்களுக்கு வழங்கும் திட்டத்தைச் சித்திரை மாத பூரணதினத்தன்று ஆரம்பித்துள்ளார்கள் -145

யானைக்குட்டி அன்பளிப்பு

(கண்டி)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட மூன்றாவது ஜனாதிபதியாக நியமனம்பெற்ற திரு. டி. பி. விஜயதுங்க கண்டிக்கு விஜயம் செய்தபோது கொம்பன் யானைக்குட்டி ஒன்றை கண்டி தலதாமாளிகைக்கு அன்பளிப்பு செய்துள்ளதாக தெரியவருகிறது. -59

பரிசளிப்பு வைபவம்

(யாழ்ப்பாணம்)

'ஆதாரம்' சஞ்சிகையின் 2ம் இதழுக்கான குறுக்கெழுத்துப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்வழங்கும் வைபவம் யாழ். மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழக பொன்னம்மான் வருத்தாலிகு மண்டபத்தில் கடந்த 6ம் திகதி நடைபெற்றது.

குறுக்கெழுத்துப் போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம்:

1ம் பரிசு செல்வி இளையதம்பி சுயாலினி வேம்படி மகளிர் கல்லூரி, 2ம் பரிசு தே. ஜெயதீஸ்வரன் வவுனியா, 3ம் பரிசு செல்வி யோ. டிஸ்பகலா கண்டுக்குளி மகளிர் கல்லூரி.

முதலாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுக்கொண்டவர்களுக்கான பரிசில்களை யாழ். மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் இளம்பரிதி வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

ஆசிரியர் பற்றாக்குறை

(தாளையடி)

வடமராட்சி கிழக்கிலுள்ள நாகர்கோவில் உடுத்துறை கொத்தணிக்குட்பட்ட பாடசாலைகளில் அழகியல் பாடங்களான, சித்திரம், சங்கீதம் போன்ற பாடங்களை படிப்பிப்பதற்கு போதியளவு ஆசிரியர்கள் இல்லாத காரணத்தினால் இப் பாடங்களை பயிலும் மாணவர்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

இரு கொத்தணிகளிலுமுள்ள பதினேழு பாடசாலைகளிலும், சித்திரம், உடற்பயிற்சி ஆசிரியர் எவரும் இல்லையெனக் கூறப்படுகிறது.

இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ் கலைவித்திணைக்களம் எழுதுவினைஞர்களான கருத்தரங்கு இன்று 11ம் திகதி தொடக்கம் நான்குநாட்கள் நடைபெறும். 93-05-10ம் திகதியன்று பங்குபற்றுமாறு கடிதம் கிடைக்கப்பெற்றோர் 93-05-11ம் திகதி தவறாது சமுகந்தருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது,

ரிச்சர்ட் டி சொய்சா கொலையை தேர்தலைக் கண்காணிக்கும் அரசு மீண்டும் விசாரிக்கவேண்டும்

எதிர்க்கட்சிகள் கோரிக்கை

(தொழும்பு)

காலஞ்சென்ற பத்திரிகையாளர் ரிச்சார்ட் டி சொய்சா கொலை தொடர்பாக புதிய விசாரணை ஒன்றை ஆரம்பிக்குமாறும் இதற்கென ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமிக்குமாறும் எதிர்க்கட்சிகள் அரசைக் கோரியுள்ளன.

ரிச்சார்ட் டி சொய்சாவின் தாயார் டாக்டர் மனோராணி சரவணமுத்துவுக்கு எதிரான வழக்கு வாபஸ்பெறப்பட்டிருப்பதால் மேற்படி விசாரணையை ஆரம்பிக்கமுடியும் என எதிர்க்கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

திருமதி சரவணமுத்துவுக்கு எதிராக பொலிஸ் உத்தியோகஸ்தர் ருனி குணசிங்க வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

ஜனாதிபதி பிரேமதாஸா குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டபோது இந்தப் பொலிஸ் உத்தியோகஸ்தரும் கொலைப்பட்டார். அதனால் அவர்மீதான வழக்கு வாபஸ் பெறப்பட்டது.

எனவே ரிச்சார்ட்டி சொய்சா கொலை தொடர்பாக புதிய விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் அதற்கென ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டுமெனவும் எதிர்க்கட்சியினர் அரசைக் கோரியுள்ளனர். (இ)

அரச ஊழியர்களுக்கு 500 ரூபா சம்பள அதிகரிப்பு

(தொழும்பு

மாகாணசபை தேர்தலை கண்காணித்து நடத்தும் அரச ஊழியர்களுக்கு ஜனாதிபதி விஜேதுங்க 500 ரூபா சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட பல சலுகைகளை வழங்கப் போவதாக நேற்று அறிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் சுமார் 32 ஆயிரம் அரச ஊழியர்கள் நேற்று திங்கட்கிழமையன்று தபால் மூலம் தங்கள் வாக்குகளை பதிவுசெய்த இந்நிலையில் ஜனாதிபதி விஜேதுங்காவின் சலுகை அறிவிப்பு வெளிப்படையான ஒரு வஞ்சம் என எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டியுள்ளன.

ஜனாதிபதி விஜேதுங்காவின் இந்தகைய தேர்தல் விதிமுறை மீறல் குறித்து தேர்தல் கண்காணிக்க வந்துள்ள சர்வதேச குழுவினரிடம் புகார் செய்யவுள்ளதாகவும் எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

இதேவேளை மாகாணசபைத் தேர்தல் நடைபெற இன்னும் ஒருவாரம் இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (வ)

மாகாணசபைத் தேர்தல்:

வாக்குச் சீட்டுக்களை வைத்திருப்போர் கைதாவர்

(தொழும்பு)

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலின் போது அங்கீகரிக்கப்பட்ட வாக்குச் சீட்டுக்களையோ, அல்லது போலி வாக்குச் சீட்டுக்களையோ ஒருவர் தம்முடன் வைத்திருப்பது சட்டவிரோதமானது. அப்படி வாக்குச் சீட்டுக்களை வைத்திருப்பவர்களை உடனடியாக கைது செய்யும்படி தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

மாகாணசபைத் தேர்தலின் போது தலையீடுகள் ஏற்படுவதை தடுப்பதற்கு வேண்டிய சகல நடவடிக்கைகளையும் எடுக்கும்படியும் தேர்தல் ஆணையாளர் நாட்டிலுள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் உத்தரவிட்டுள்ளார். (வி)

தபால் மூலம் வாக்களிப்பு நேற்று முதல் ஆரம்பம்

(தொழும்பு)

எதிர்வரும் 17ம் திகதி நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நேற்று முதல் ஆரம்பமானது.

ஒரு லட்சத்து இருபத்தையாயிரம் வாக்காளர்கள் தபால் மூலம் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். இவர்கள் தாம் கடமையாற்றும் கரியாலயங்களிலேயே இவ்வாரத்துக்குள் வாக்களிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார். (வி-இ)

சர்வதேச கண்காணிப்புக் குழு

தேர்தல் ஆணையாளர் சந்திப்பு

(தொழும்பு)

மாகாணசபைத் தேர்தலைக் கண்காணிப்பதற்காக இலங்கை வந்துள்ள சர்வதேச கண்காணிப்புக் குழுவினரை தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா நேற்று கொழும்பில் சந்தித்து அவர்களின் கடமைபற்றி விளக்கிக் கூறினார்.

அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், கனடா, பிரான்ஸ், இந்தியா, நேபாளம், பாகிஸ்தான், பிரிட்டன், அமெரிக்கா ஆகிய 9 நாடுகளைச் சேர்ந்த 23 பிரதிநிதிகளும் இன்று முதல் தேர்தல் நடைபெறும் அனைத்து மாவட்டங்களுக்கும் சிறுசிறு குழுக்களாகப் பிரிந்து செல்லவுள்ளனர்.

இவர்கள் ஆங்காங்கே தேர்தல் பிரசாரம், வாக்களிப்பு, வெகுஜனத் தொடர்புச் சாதனங்களின் நடவடிக்கைகள், வாக்குச் சாவடிகளில் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள் போன்ற அம்சங்களை உன்னிப்பாக அவதானிப்பார்கள். (வி-இ)

பல வாக்குச் சீட்டுக்கள் காணாமல்போயுள்ளன

(தொழும்பு)

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகள் பல காணாமல் போயிருப்பதாகத்தகவல் கிடைத்திருப்பதாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி யேச்சாளர் டாக்டர் விக்கிரமசூரிய தெரிவித்துள்ளார்.

இந்த வாக்குச் சீட்டுக்கள் தகுதிஅற்றவர்களுக்கு கிடைத்திருக்கின்றன.

இந்த வாக்குச் சீட்டுக்கள் காணாமல் போயிருப்பதாலும் அது தவறானவர்கள் கைக்குப் போய்ச் சேர்ந்திருப்பதாலும் மேற்படி தேர்தலில் முறைகேடான வாக்களிப்பு இடம்பெறலாமென நாம் அஞ்சுவதாகவும், இது குறித்து தேர்தல் ஆணையாளரின் கவனத்துக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் டாக்டர் விக்கிரமசூரிய மேலும் தெரிவித்தார். (இ)

ராணுவத்திலும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்கனவே உட்பூசல் நிலையில் மோதல்களில் ஈடுபட்டு வந்த முப்படைத் தளபதிகளுக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலருக்குமிடையிலான மோதல் ஓரளவு தணியுமென எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. (கி-இ)

மன்னார்

(மன்னார்

மன்னாரில் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் உள்ள தமிழ் மக்கள் அங்கிருந்து வெளியேறுவதற்கு இராணுவம் தடை விதித்துள்ளது.

இராணுவத்தினரினதும் அதனுடன் இணைந்து செயல்

வைத்திய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புக்கு வந்துள்ளன.

இந்த சாதனங்கள் கட்டம் கட்டமாக கொழும்பிலிருந்து கப்பல் மூலம் வடபகுதிக்கு கொண்டுவரப்படுமெனவும் இவற்றுள் 200 கே. வி. சக்தியுள்ள இருராட்சத ஜெனரேட்டர்களும் உள்ளன என்றும் யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (வி-இ)

திருநெல்வேலியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசாலை வளவில் முற்றுப்பெறாமல் இருக்கும் 400 படுக்கை வசதிகளைக்கொண்ட மூன்று மாடிக் கட்டட வேலைகளும் உடனடியாக ஆரம்பிக்கப்படுவதுடன், திருநெல்வேலியில் பல கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவிருக்கும் புதிய வைத்தியசாலையின் கட்டட வேலைகளும் ஆரம்பிக்கப்படும் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (வி-இ)

இனப் பிரச்னையை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்நாட்டு மக்களாகிய நாம் அனைவரும் வருங்காலத்தில் ஒற்றுமையாக வாழ்ந்து நாட்டின் ஜனநாயகத்தைக் கட்டிக்காக்க வேண்டும்.

தற்போதைய சூழ்நிலைகளுக்கேற்ப நாம் எமது நிலைப்பாடுகளை மாற்றி வாழப்பழகிக் கொள்ள வேண்டும். முக்கியமாக நாம் இரண்டு பிரச்னைகளுக்கு உடனடித்தீர்வு காண வேண்டும்.

முதலாவது இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்னைக்கு உடனடித்தீர்வு காணவேண்டும்.

இரண்டாவது வெளிநாட்டு முதலீடுகளை அதிகரித்து இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கவேண்டும்.

கடந்த இருபது வருட காலத்தில் இளைஞர்கள் அரசுக்கு எதிராக ஆயுதங்கள் ஏந்தியதையும் நாம் கவனத்தில் எடுக்க வேண்டும். நாட்டில் பிரச்னைகள் தீர்க்கப்படும்போது அவர்கள் விடயத்தில் கவனம் செலுத்த நாம் தவறக்கூடாது.

இளைஞர்களின் உண்மையான தேவைகளையும் அபிலாஷைகளையும் கவனத்தில் கொண்டு அதற்கு ஏற்றவிதமாகவும் பிரச்னைகளுக்குத் தீர்வுகாணவேண்டும். (வி-இ)

இராணுவப்பகுதிகளிலிருந்து தமிழ்மக்கள் வெளியேறதடை!

(மன்னார்

மன்னாரில் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் உள்ள தமிழ் மக்கள் அங்கிருந்து வெளியேறுவதற்கு இராணுவம் தடை விதித்துள்ளது.

இராணுவத்தினரினதும் அதனுடன் இணைந்து செயல்படும் மற்றைய குழுக்களினதும் நெருக்கடியினை தாங்க முடியாத தமிழ் மக்கள் அங்கிருந்து வெளியேற முடியாது இராணுவத்தினரினால் தடை

நீர்கொழும்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடத்துமாறும் கோரியுள்ளனர்.

நீர்கொழும்பு பொலிஸார் தேர்தல் ஆணையாளருக்கும், எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும், ஜனாதிபதிக்கும் எழுத்து மூலமான முறைப்பாடு ஒன்றையும் இது தொடர்பாக செய்துள்ளனர்.

அமைச்சர் விஜயபால மெண்டிஸின் மகன் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதாகவும் அவரின் பாதுகாப்புக்கென இந்த 50 துப்பாக்கிகளும் மேற்படி பொலிஸ் நிலையத்திலிருந்து எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

மணலாறில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கின்றன.

இந்த மோதலில் இராணுவத்தரப்பில் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

வீரச்சாவு

விடுதலைப்புலிகள் தரப்பில் லெப். தமிழ்மகிலன் அல்லது சுந்தரேஷ் (வேலு சண்முகம், சுன்னாகம்), கப்டன் வளவன் கோன் அல்லது ஜீவக்குமார் (இளையதம்பி மோகசேந்திரன் கொக்குவில்) ஆகிய இருவர் வீரச்சாவடைந்துள்ளனர்.

இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். (வி)

லலித் கொலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி பிரேமதாஸா ஆகியோர் கொலை குறித்து பொலிஸார் விடுதலைப் புலிகள் மேல் குற்றம் சுமத்தியுள்ளனர். எனினும் லலித் அத்துலத்முதலி கொலை தொடர்பாக நாம் இன்னமும் அரசின் மீதே குற்றஞ் சுமத்துகிறோம்.

அத்துலத்முதலி, பிரேமதாஸா கொலைகளை ஒரேவிதத்தில் சமப்படுத்தி பொலிசார் பொதுமக்களை பிழையான வழியில் திசை திருப்புகின்றனர்.

இந்தக் கொலையை விடுதலைப்புலிகள் தான் செய்தனர் என்று கூறுவது பொலிசாருக்கு மிகவும் இலகுவான ஒரு காரியமாகும்.

லலித் அத்துலத்முதலியை கொலை செய்தது யாரென்று எவருக்கும் தெரியாது.

முகமூடி பிளேசிலுள்ள ஒருவரைக்கொண்டுவந்து போட்டார்கள். அவர் தான் லலித் அத்துலத்முதலியை கட்டார் என்பதில் இன்னும் பெரிய தொரு ஐயம் நிலவுகிறது என்றார். (இ)

கிராம சேவையாளர் பரீட்சை

(தொழும்பு)

கிராம சேவையாளர்களின் முதலாம் தர உயர்வுப் பரீட்சை, எதிர்வரும் ஜூலை மாதம் நாடு பூராகவும் நடைபெறுமென்று அரசு நேற்று அறிவித்தது.

நீண்டகாலமாக 2-ம்தரத்திலுள்ள கிராமசேவையாளர்களின் குறைகள் மேற்படிப் பரீட்சையால் தீர்த்து வைக்கப்படும். (வி)

பட்டதாரி ஆசிரியர் சம்பளம்

(தொழும்பு)

எட்டாயிரம் பட்டதாரி ஆசிரியர்களுக்கு அடுத்தமாதம் 1ம் திகதியிலிருந்து பட்டதாரி ஆசிரியர்களுக்குரிய முழுச்சம்பளமும் வழங்கப்படவுள்ளது.

1992/93 ஆண்டுகளில் சேவையில் சேர்ந்த 8 ஆயிரம் பட்டதாரி ஆசிரியர்களுக்கும், மேலும் ஒரு மாதகால சேவையைப் பூர்த்திசெய்த இரண்டாயிரம் பட்டதாரி ஆசிரியர்களுக்கும் அடுத்த ஜூன் மாதம் 1ம் திகதி முதல் பட்டதாரிகளுக்கான முழுச் சம்பளமும் வழங்கப்படுமென கல்வி அமைச்சு நேற்று அறிவித்தது (வி)

ரஷ்ய அதிபரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆபத்து விளைவிக்கக்கூடிய நூற்றுக்கும் மேற்பட்ட முயற்சிகள் நடைபெற்றதாகவும், அந்த பாதுகாப்புப் படைத்தளபதி மேலும் தெரிவித்தார். (வி)

லலித்-பிரேமா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் கண்டுபிடித்திருப்பதாக சண்டே ஒப்சேவர் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (இ)

இராணுவத் தளபதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை தீர்க்கமான அறிவிப்பு எதுவும் வெளியாகவில்லை.

இதேவேளை கடந்த மாதம் இராணுவத்திலிருந்து இரு லெப்டினன்ட் ஜெனரல்கள் தரத்திலான தளபதிகள் சேவை நீடிப்பை ஏற்றுக்கொள்வதா ஒப்பு பெற்றமை இராணுவத்திற்கு ஒரு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதாம். (கி-இ)

இவைத்திரிவன "சுதந்திரன்" வீரகேசரி [illegible] மேற்கு வீதி, [illegible]-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு மே மாதம் 11-ம் திகதி அச்சிடு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Colombo under License Number D/10991/B